இடம்.	உதவித் தொகை எண்ணிக்கை.
(1)	(2)
2 தேசிய சர்க்கரை பயிற்சி நிலையம், கான்பூர்.	வருடத்தில் ஒரு நபர் வீதம்.
3 அரசினர் சுரங்கப் பயிற்சிப் பள்ளி, கொத்தகுடம்.	வருடத்தில் 2 நபர்களுக்கு.
4 சுரங்கப்பள்ளி, மாண்டல்.	கோர வருடத்தில் 18 நபர்களுக்கு (புதியது மற்றும் புதுப்பித்தல் உட்பட).
5 கடல் பொறியியல் பயிற்சி நிலையம், கல்கத்தா.	வருடத்தில் 2 நபர்களுக்கு.
6 இந்திய சுரங்கப் பள்ளி, தன்பாத்.	இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு மாணவர்களுக்கு.

மேற்படிக் கல்வி உதவி மாதம் ரூ. 125 வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இது தவிர, வெளிமாநிலங்களில், பயிலும் தமிழக மாணவர்களுக்கு (1) இயற்கை எய்திய அரசு ஊழியர்களின் மக்களுக்கான கல்வி உதவி (2) தாயகம் திரும்பியோரின் மக்களுக்கான கல்வி உதவி (3) 92 எம்.ஈ.ஆர். படி கல்வி கட்டண சலுகைகள் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் தச்சு கொல்லுப் பட்டறைகள்.

523—(* வினா எண். 21642) திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தச்சு, கொல்லுப் பட்டறைகள் எத்தனை ஒன்றியங்களில் இயங்குகின்றன ?

(ஆ) இதுபோல் தொழிற் பட்டறைகள் மற்ற பஞ்சாயத்து யூனியன்களிலும் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 198 இடங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் தச்சு கொல்லுப்பட்டறைகள் 152 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுகின்றன.

(ஆ) அவைபோன்ற தொழிற்பட்டறைகளை மற்ற ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது அமைக்கும் வாய்ப்பு இல்லை.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, 152 ஒன்றியங்களில் 198 தச்சு கொல்லுப் பட்டறைகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். சில ஒன்றியங்களில் ஊழல்கள் அந்த ஒன்றியத் தலைவர்களால் நடைபெற்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெற்றிருக்கிற 'ஒன்றியத் தச்சு கொல்லுப் பட்டறைகள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அந்த ஊழல்களுக்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தச்சு கொல்லுப் பட்டறைகள் அமைக்கவேண்டுமென்று ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ஒருசிலர் பணத்தை எடுத்து மோசடி செய்திருப்பதாக அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. தென்னாற்காடு மாவட்டம் அண்ணா ஒன்றியத்தில் கூட இதைப் போன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்கு மன்றத்திலே வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, இப்போது இருப்பவை தவிர வேறு ஒன்றியங்களில் இந்த தச்சு கொல்லுப் பட்டறைகளை அமைக்க உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். நல்ல நிலைமையில் இருக்கிற ஒன்றியங்களில் கூட்டுறவு முறையில் தச்சு கொல்லுப் பட்டறைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும், இந்த தச்சு கொல்லுப் பட்டறைகளில் என்னென்ன பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன? அவை மலிவாக கிராம மக்களுக்கு கிடைக்க அரசு குறைந்த இலாபத்தை கருதி அந்தத் தொழில்களை ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த தச்சு கொல்லுப் பட்டறைகள் மூலமாகச் செய்யப்படும் பொருள்கள் அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்படுகின்ற முறையில் கூட்டுறவு முறையிலே ஆரம்பிக்கப்பட்டன. இந்த பட்டறைகளுக்கு நாம் கொடுக்கும் கருவிகளின் விலை அதிகமாக இருக்கிறது. அங்கே உற்பத்தியாகக் கூடிய பொருள்கள் எக்னாமிக்காக, பொருளாதார ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இல்லை. ஆகவே, இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் பட்டறைகளேகூட பெரும்பாலும் நஷ்டத்தில் செயல்படுகின்றன. அவற்றை எப்படி இலாபகரமாகச் செயல்படச் செய்வது என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இப்போது ஆராய்ச்சிச் செய்யப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது இந்த தச்சு கொல்லுப் பட்டறைகள் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று சொன்னார்கள். அங்கே இலாபகரமாக செயல்படுகின்ற தொழில்களும் இருக்கின்றன. குறிப்பாக, நம்முடைய உள்ளாட்சி, அரசாங்க பள்ளிகளை எடுத்துக் கொண்டால், மேசை, நாற்காலி போன்றவை

களை வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்கிக் கொடுப்பதைவிட இந்தப் பட்டறைகளில் செய்யப்படுபவை விலை குறைவாக, இலாபகரமாக இருக்கிறது. இந்த மாதிரி கார்பண்டரி போன்ற தொழில்கள் இலாபகரமாக இருக்கும்போது, இப்படிப்பட்ட தொழில்களை நல்ல முறையில் தொடர்ந்து நடத்த அரசாங்கம் முதலீடு கொடுத்து ஊக்குவிக்க ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இவை எல்லாம் கசப்பான உண்மைகள். ஆகையால்தான் நான் அவற்றை வெளியிடாமல் கொஞ்சம் கட்டிக்காத்து, பதில் சொல்லி யிருக்கிறேன். ஏனென்றால், இங்கே உள்ள உறுப்பினர் ஒருவர் கூட இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார். அவர் இப்போது அவை யில் இல்லை. அதைச் சொல்லக்கூடாது என்பதற்காக மறைத்துச் சொல்கிறேன். இந்தப் பட்டறைகள் மூலம் கிடைக்கின்ற பொருள்களை ஆங்காங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள், அரசின் சார்பிலே இருக்கின்ற மன்றங்கள் போன்றவைகளுக்கு எல்லாம் கொடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனாலும், அரசாங்கத்தின் மூலம் செய்யப்படுகிற பொருள்கள் எல்லாம் We must ensure the quality ஏனென்றால், குவாலிட்டி, தரம் நல்லதாக இருக்க வேண்டுமென்ற முறையில் இவை செய்யப்படுகின்றன. அதனால் விலை வெளி மார்க்கெட்டில் இருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் வெளி மார்க்கெட்டில் ஏன் வாங்கக் கூடாது என்ற எண்ணம் இருக்கிறது. அந்த அடிப்படையில், நல்ல தரமான, தேவையான பொருள்களை உற்பத்திச் செய்ய முடியுமா என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண் டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற வில்லேஜ் இன்டஸ்டிரீஸ் அதிகாரிகள் மூலமாக தச்சுப் பட்டறைகள், மற்ற தொழில்கள் நடந்து வரு கின்றன. ஏற்கனவே, ஊராட்சி ஒன்றியங்களில் இருந்த பல இலாக்காக்கள் போய்விட்டதைப்போல் இதையும் கவனிக்காமல் விட்டால், போய்விடும். அதனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கிற பொறுப்புகள் குறைந்து கொண்டே வருகின்றன. இந்த நிலையைப் போக்க, இதைச் சீர் செய்ய அமைச்சரவர்கள் கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருந் தாலும், வேறு துறைகளின் மூலம் நல்ல முறையில் அதைச் செய்யவேண்டும் என்கிற எண்ணத்தோடு, அரசாங்கம் இப்படிப் பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால்

குறைவாக அதிகாரம் இருந்தாலும், நிறைவான முறையில் அதைச் செய்ய வேண்டும் என்பதைத் தான் அரசு முக்கியமாகக் கருதுகின்றது. இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து, பல்வேறு திட்டங்களை, ஊராட்சி ஒன்றியம் மூலமாக செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பெரும் தலைவராக இருந்தவர். அவர் இப்போதுகூட தேர்தலிலே போட்டியிட வேண்டுமென்று விரும்பினார் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) என்னிடத்திலே போட்டியிடப் போவதாகக் கூடச் சொன்னார். ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களினுடைய அதிகாரங்கள் விரிவாக்கப்பட வேண்டுமென்றுகூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தச்சு, கொல்லுப் பட்டறைகள் போன்றவை 152 ஊராட்சி ஒன்றியங்களில் 198 இடங்களில் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும், அதே சமயத்தில் நஷ்டம் வருவதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் தொழிற்திறமையுள்ள வல்லுநர்களைப் போட்டு, நஷ்டம் இல்லாமல், மேலும் முன்னேறுவதற்கு, இன்னும் பல்வேறு ஒன்றியங்களிலும் புதியதாக ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இருக்கின்ற ஒன்றியங்களில் உள்ள பட்டறைகளை முதலில் லாபத்திற்குக் கொண்டுவர வேண்டும். அதற்குப் பிறகு தான் பாக்கி இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்பிக்கலாமா என்பதைப் பற்றி ஆய்வு செய்ய முடியும்.

ஈரோடு நகராட்சி தினசரி மார்க்கட்டின் ஏலத்தொகை வருமானம்.

524—(*வினா எண். 21663) திரு. சு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஈரோடு நகராட்சி தினசரி மார்க்கட்டின் ஏலத் தொகை வருமானம் கடந்த இரண்டாண்டுகளில் பெருமளவு குறைந்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கென்ன காரணம் ?

(இ) 1981-82, 1982-83 ஆண்டுகளுக்குக் கிடைத்துள்ள ஏல வருமானம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஈரோடு நகராட்சி தினசரி மார்க்கெட்டின் ஒரு பகுதியில் புதியதாக கட்டிடங்கள் கட்டுவதற்காக காலி செய்ய நேர்ந்ததால் வருமானம் குறைய நேர்ந்தது.

(இ) 1981-82 ஆம் ஆண்டு ரூ. 3,05,700.

1982-83 ஆம் ஆண்டு ரூ. 4,80,221.